பொ.ச.மு. 120 ஆசனங்களுடன் வெற்றி பெறும்
அரச அதிகாரிகளின் அறிக்கையில் தெரிவிப்பு!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 6 இதழ் 168
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-7-1994

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி 120 ஆசனங்களைப் பெற்று வெற்றிபெறுமென அரச தரப்பில் மேற்கொண்ட கணிப்பீடு ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

அரச வேவுச் சேவை அதிகாரிகளும் மற்றும் அரசு அதிகாரிகளும் இணைந்து இந்தக் கணிப்பீட்டு அறிக்கை அரசாங்கத்திடம் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழு நாட்டின் 18 மாவட்டங்களில் இந்தக் கணிப்பீட்டை மேற்கொண்டது. இதன்படி எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுசன ஐக்கிய

(4ம் பக்கம் பார்க்க)

அரசியலமைப்பு மாற்றப்படும்

(கொழும்பு)

நாம் பதவிக்கு வந்ததும் அரசியலமைப்பு மாற்றியமைக்கப்படும்;

பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் ஜி. எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு பொதுசன ஐக்கிய முன்னணியின் 40 பக்கங்கள் அடங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு பத்திரிகையாளர் மத்தியில் பேசிய பேராசிரியர் பீரிஸ் மேலும்

4ம் பக்கம் பார்க்க)

ஹெலி தாக்கு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு, சில்லாலை, தொல்புரம், சங்கானை, சுழிபுரம், சுன்னாகம் ஆகிய பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை ஹெலிகொப்டர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. ச-72

பண்டத்தரிப்பு பகுதியில்

படை முன்னேற்றம் முறியடிப்பு

புலிகள் மேணி நேரம் கடும் சமர்!

ராணுவம் இழப்புகளுடன் முகாம் திரும்பியது!!

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு இராணுவ முகாமிலிருந்து நேற்று பெரும் எடுப்பில் வெளியேறிய இராணுவத்தினரை நோக்கி விடுதலைப் புலிகள் ஆறுமணித்தியாலம் வரை மேற்கொண்ட கடும் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் இழப்புகளுடன் முகாம் திரும்பினர்,

நேற்றுக் காலை 7-30 மணியளவில் சுமார் 1000 கிலோ மீற்றர் வரை முன்னேறிய இராணுவத்தினரின் முன்னேற்ற முயற்சியை இடைமறித்து விடுதலைப்புலிகள் உக்கிர தாக்குதலை தொடுத்தனர். பண்டத்தரிப்பு புனித பத்திமாதா தேவாலயப் பகுதிப் பக்கமாக வயல் வெளிகளூடாக இரு பிரிவுகளாக இராணுவத்தினர் முன்னேறினர்.

இப்பகுதி ஊடாக முன்

(4ம் பக்கம் பார்க்க)

ஷெல்தாக்குதலில் ஒருவர் பலி

(பண்டத்தரிப்பு)

நேற்று முற்பகல் பத்துமணியளவில் மாதகல் இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் பேதுபிரான்பற்றுவாசியான தம்பு துரைராஜா (வயது 54) (நாலு பிள்ளைகளின் தந்தை) என்பவர் ஸ்தலத்தில் உடல் சிதறிப் பலியானார்.

இவரது வீடும் பலத்த சேதமடைந்தது. பிரான்பற்றில் விழுந்து வெடித்த மற்றொரு ஷெல்லினால் இரண்டுபேர் படுகாயமடைந்து யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. 72 இ

10க்கு அதிகமானோர் காயம்

(திருநெல்வேலி)

இராணுவம் நேற்று பிரான்பற்று, வடலியடைப்பு, சித்தன்கேணி பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை நடத்தியது. இதனால் பத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர்.

இத்தாக்குதலில் காயமடைந்தவர் விபரம் வருமாறு:

ஜெயமணி, வயது 87, பண்டத்தரிப்பு. ஜெ. சிவசக்தி, வயது 40, பண்டத்தரிப்பு.

(4ம் பக்கம் பார்க்க)

மக்கள் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கடுமையான ஷெல்தாக்குதல் காரணமாக அங்கு வாழ்ந்த பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து அயற்கிராமங்களான வடலியடைப்பு, பனிப்புலம், பிரான்பற்று, சங்கானைமேற்கு ஆகிய இடங்களில் தஞ்சமடைந்தனர்.

தொட்டிலடி, சண்டிலிப்

(4-ம் பக்கம் பார்க்க)

டி. பி. யின் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கலந்து கொண்ட கூட்டமேடை இடிந்து விழுந்ததையடுத்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் பாதுகாப்பு மேலும்பலப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தேர்தலையொட்டி தினமும் மூன்று அல்லது நான்கு தடவைகள் ஐ. தே. க வின் பிரசார மேடைகளில் தோன்றி ஜனாதிபதி

(4ம் பக்கம் பார்க்க)

மேடை விவகாரம் குறித்து பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் கொலன்ன என்ற இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேடை உடைந்து விழுந்ததை விசாரிப்பதற்கு இரகசியப் பொலிஸார் குழு ஒன்று அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த மேடை உடைந்து விழுந்ததில் ஆறு பேர் காய

(4ம் பக்கம் பார்க்க)

கடற்படையினர் கைது செய்த
இந்திய மீனவர்களை
இல. அரசு ஒப்படைக்கும்

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட ஆறு இந்திய மீனவர்களை இலங்கை அரசு திருப்பி ஒப்படைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆறு மீனவர்களையும் திருப்பி ஒப்படைப்பதற்கு வசதியான ஒரு திகதியை தருமாறு கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் தமிழக அர

4-ம் பக்கம் பார்க்க)

★ ஷூமேக்கர் லெவி:

கடைசித்துண்டு வியாழனுடன் மோதியது

(கொழும்பு)

ஷூமேக்கர் லெவி-9 வால்வெள்ளியின் கடைசித்துண்டு நேற்றுவியாழன் கிரகத்துடன் மோதியது.

கடந்த 20 வருடங்களுக்கு [illegible] மேலாக வலம்வந்த ஷூமேக்கர் லெவி-9 இன் மிகப்பெரிய துண்டு இதுவெனக் கூறப்படு

(4-ம் பக்கம் பார்க்க)

வாக்குச்சீட்டுகள் அச்சிடும் வேலை துரிதமாக ஆரம்பம்!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி அரசாங்க அச்சகத்தின் அதிகாரி தெரிவித்ததாவது: வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் வேலையில் ஆயிரம் ஊழியர்கள் இரவு பகலாக

(4-ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

O/L Maths 94

நிச்சயம் Credit Distinction பெறுபேறடைய (விடைக் கணிப்பு) ஆண்டு 9, 10 உட்பட வினா-விடை மூலம் B.Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (ஏ-1140)

O/L ஆங்கிலம் 94

Credit பெறுபேறடைய (விருப்பத்திற்குரிய ஆங்கிலம் 6—10 வரை அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும் 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (ஏ 1141)

தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சுக்கூடத்திற்கு உடனடியாக 12, 14, 18, 24, 36, 48, 72 பொயின்ட்ஸ் அச்சு எழுத்து தலா ஒவ்வொரு கேஸ் தேவை. மேலும் ஆங்கில எழுத்தும் தேவை. வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும். நல்ல விலை தரப்படும். விபரத்திற்கு விளம்பர இல: ஏ-4230, C/o ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். (ஏ-3240)

தமிழில் உள்ள காவியங்களில் கம்பகாவியம் சிறப்பானது

துணைவேந்தர் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழில் பல தலை சிறந்த காவியங்கள் உள்ளன. இதில் சிறப்பானது கம்பகாவியம். அகில இலங்கை கம்பன் கழகம் வருடா வருடம் இதற்கு விழா எடுத்து வருகிறது. இந்த விழாவில் சிறந்த சேவையாளர் என்று கருதும் பல பேரறிஞர்களுக்கு கம்பன் கழகம் வருடா வருடம் விருது வழங்கி கௌரவிப்பது வழக்கம். இதில் அதி உயர்ந்த விருதாக மகர யாழ் விருது வழங்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நல்லூர் கோவில் வடக்கு வீதியில் நடைபெற்ற அகில இலங்கை கம்பன் விழா ஆரம்ப நிகழ்விற்கு தலைமை வகித்த யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தனது தலைமை உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

துணைவேந்தர் க. குணரத்தினம் தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில் வரவேற்புரையை கம்பன் கழக அமைப்பாளர் திரு. ஜெயராசா நிகழ்த்தினார். அவர் தனதுரையில்; இன்று இந்த அதி உயர்ந்த மகர யாழ் விருதை பெறுபவரான அமரர் துரைராசா எவ்வளவோ பட்டங்கள் பதவிகளை பெற்றிருந்தும் அவரது எளிமையான வாழ்க்கை முறை எம்மை எல்லாம் கவர்ந்தது. இவர் மருத்துவத்துறையிலிருந்து யாழ் பல்கலைக்கழகத்துக்கு சைக்கிளிலேயே வருவார். இவருடைய இறப்புக்கு இதுவும் ஒரு காரணமாக உள்ளது.

அமரர் துரைராசா எவ்வளவோ வசதிகளுடன் வாழ வேண்டிய நிலை இருந்தும் அவர் தனது இலட்சியத்திலிருந்து சிறிதளவும் தளராது மக்களோடு மக்களாக வாழ்ந்தவருமாவார். வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுக்கு வழங்க வேண்டிய அதி உயர்ந்த இந்த மகர யாழ் விருது இன்று மரணத்துக்குப் பிந்திய விருதாக அமரர் துரைராசாவுக்கு வழங்கப்படுகிறது. வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு வழங்க வேண்டும் என்பது கம்பன் கழக வழக்கம் ஆனால் இந்த விடயம் மக்கள் மத்தியில் இடம்பெற்றபோது ஏகோபித்த நிலையில் மக்கள் இவருக்கு இந்த விருது வழங்குவது பொருத்தமானது என [illegible] செய்ததைத் தொடர்ந்து எமது கம்பன் கழக அறிஞர் குழு எவ்வளவோ [illegible] பின் இந்த முடிவை எடுத்தது என்றும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட பிரதிநிதி செல்வி மேரி பேர்க்கின்ஸ், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் 'அணிகலன்' என்னும் நூலை வெளியிட்டு வைத்தார். இதன் முதல் பிரதியை குகன் ஸ்ரூடியோ அதிபர் திரு. க. நவரத்தினம் பெற்றுக் கொண்டார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் சிறப்புரை வழங்கியதைத் தொடர்ந்து ஆடல் வேள்வி சீதாபஹரணம் நடைபெற்றது. (162-ஒ)

வாகன விபத்தில் 16பேர் மரணம்

(பெங்களூர்)

கர்நாடக விஜயபூர் மாவட்டத்தில் எண்ணெய் தாங்கி ஒன்றும் ஜீப் ஒன்றும் நேருக்கு நேர் மோதி தீ பிடித்துக் கொண்டதில் 16 பேர் உயிருடன் எரிந்து போனார்கள்.

இவர்களில் 7 பேர் குழந்தைகள் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று நடந்தது. (மே)

வெளிவாரி பரீட்சைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலை முதல் தேர்வுப் பரீட்சையும், விஞ்ஞான முதல் தேர்வுப் பரீட்சையும் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் நேற்று தெரிவித்தார்.

கலை முதல் தேர்வுப்பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துக்கும், விஞ்ஞான முதல் தேர்வுப் பரீட்சை அக்டோபர் மாதத்திற்கும் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு பல்கலைக்கழக வெளிவாரிப்பிரிவு அறிவித்துள்ளது. (162)

இன்று

(மானிப்பாய்)

அளவெட்டி [illegible] பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று 22 ம் திகதி வெள்ளி பிற்பகல் 2 மணி முதல் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக அருணோதய வித்தியாசாலை அதிபர் ச. கைலாசநாதன் கலந்துகொள்வார். -71

0 0

([illegible])

சுழிபுரம் பறுளாய் ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் இன்று 22ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆயிரத்தெட்டுச் சங்காபிஷேக ஆராதனைகளும், விநாயகப் பெருமானின் சப்பர மஞ்ச வாகன வீதி உலாவும் நடைபெறவுள்ளது. -59

0 0

(கொழும்புத்துறை)

கடற்புலிகள் மகளிர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினூடாக சுயதொழில் ஊக்குவிப்புநிதி பெறும் கொழும்புத்துறை பயனாளிகளுக்கு இன்று 22ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்புத்துறை துறையப்பா வித்தியாலயத்தில் வழங்கப்படும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினர் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தி வரும் தொடர் நிகழ்ச்சிகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர்களின் "பேச்சு, பக்திப்பாடல்கள்" இடம்பெற உள்ளன. அறிமுக உரையை ஆசிரியர் க. விஜயநாதன் வழங்குகின்றார். -ம

0 0 0

(யாழ்ப்பாணம்)

[illegible] ஸ்ரீ சத்தியசாயி பஜனை நிலையம், புனிதகுரு பூரணை தினமாகிய இன்று 22-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 4-00 மணிக்கு நகர சங்கீர்த்தனமும், மாலை 3-30 மணிக்கு விசேட நிகழ்ச்சியாக அஷ்டோத்திர பூஜையும், அதைத்தொடர்ந்து பகவானின் அருளாசியை நாடி சத்திய சாயி நிறுவனங்களின் திவ்விய சாதனையான "வேதநாம லிகித ஜெபம்" ஆரம்பித்து விளக்கும் ஏற்றி மங்கள ஆரத்தியுடன் 5-30 மணியளவில் நிகழ்ச்சிகள் முடிவுறும்.

றுவண்டா அகதிகள் நிலை மோசமடைந்து வருகிறது

([illegible])

றுவண்டாவிலிருந்து சயீர் நாட்டிற்கு ஓடிவந்த பல லட்சம் அகதிகளின் நிலை தினம், தினம் மோசமடைந்து வருவதாக யு. என். எச். சி. ஆர் அறிவித்துள்ளது.

றுவண்டாவில் தேசபக்த முன்னணி போராளிகள் ஆட்சியை கைப்பற்றும் சூழ்நிலையை அடுத்து பழி வாங்கல் படலம் என்ற அச்சத்தில் பெரும்பான்மை இனத்தவர் சயீர் நாட்டிற்கு அகதிகளாக லட்சக்கணக்கில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை முந்திய ஆட்சியாளரின் கொடுமையால் பல லட்சம் சிறுபான்மை மக்கள் தன்சானியாவில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

சயீர் நாட்டில் இந்த அகதிகளை பராமரிக்கும் யு. என். எச். சி. ஆருக்கு பெரும் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது குடிநீர், உணவு மருந்துகள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது அகதிகளிடையே கொலரா நோய் பரவுகிறது. 1200 பேருக்கு கொலரா நோய் கண்டுள்ளது அவர்களில் அநேகர் இறந்துவிட்டனர். பலபேருக்கு நோய் தொற்றிய படி இருக்கிறது அகதிகள் தங்கியிருக்கும் "காம்ப்" எல்லாம் நிரம்பி வழிகிறது தினம் தினம் அகதிகள் வந்த வண்ணமும் உள்ளனர்.

உடனடியாக இந்த அகதிகட்கு நிவாரண நிறுவனங்கள் உணவு, குடிநீர், மருந்துகள் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்பாடு செய்யாவிடின் 10 ஆயிரம் மக்கள் நோய் பட்டினியால் மடிய நேரிடும் என யு. என். எச். சி. ஆர். எச்சரித்து உலக நாடுகளிடம் உதவி கோரியுள்ளது. (சே.பி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் [illegible] ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடம் பரிபாலன சபையின் மாதாந்த சொற்பொழிவு நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை 3-30 மணியளவில் "இறை அனுபவம்" என்னும் பொருளில் ஆசிரியர் க. சிவராசலிங்கம் சொற்பொழிவாற்றுகிறார். -ம

0 0 0

(நெல்லியடி)

புலோலி தெற்கு வெருகை நின்றதாம் சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று 22ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நாடகவிழா இடம்பெறவுள்ளது, -160

சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கதிர்காமக் கந்தனின் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு சங்கானை வெல்லிக் சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் இம்மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் ஆரம்பமாகி சண்முகார்ச்சனையும் மகேஸ்வர பூஜையும் இடம்பெற்று, அன்று மாலை பூந்தண்டிகையில் முருகப்பெருமான் வீதி உலா வருவார்.

கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலைய ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தையல், பேக்கரி, கேக் ஐசிங் முதலிய பயிற்சிகளில் பயிற்சி பெற்ற பெண்கள் நடாத்தும் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை மு. ப. 9.00 மணிக்கு நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளது. —ம

ஜெய்ப்பூர் திட்டம் 7வது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் செயற்கை கால் திட்டம் தனது 7-வது ஆண்டுநிறைவுவிழாவை கொண்டாடவுள்ளது.

இன்று 22-ம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவிருக்கும் இவ்விழாவுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரதிநிதி மேரி பேர்க்கின்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இவ்விழாவின்போது சைக்கிள் ஓட்டப் போட்டி, மூன்று சில்லுச் சைக்கிள் ஓட்டம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டிகள் [illegible] கல்லூரி மைதானத்தில் நடைபெறும். — 162

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நல்லூர் கந்தசுவாமி கோவில்

1994-ம் ஆண்டு

மகோற்சவகால
தற்காலிக கடைகள்

0-0-0-0-0-0-0-0-0-0 0-0-0-0-0-0-0-0

01. நல்லூர் இந்துவிடுதிக்கு அருகாமையிலும்
02. ஆலயம் முன்பாக பருத்தித்துறை வீதியிலும்
03. கோவில் வீதியில் ஆலயத்துக்கு வடக்குப் புறமாகவும்
04. பண்டாரமாளிகை வளவில் மாநகரசபை அலுவலகத்திற்கு மேற்குப்பக்கமாகவும்

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள்
03-08-94-ந் திகதி புதன்கிழமை
நண்பகல் 12-00 மணி வரை
ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி மனுக் கட்டணம் ரூபா 100/-ஐயும் மீளளிக்கக்கூடிய பிணையாக ரூபா 500/-ஐயும் செலுத்துவதன்பேரில் 02-08-94ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் (இணைப்பிரதியுடன்) கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 03-08-94ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் நாலுவீத இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். உரிய வரைபடத்தையும் பார்வையிட முடியும்.

குறிப்பு:

மேற்படி சந்தைப்பகுதியில் அனுமதிக்கப்படும் கடைகள் தவிர முன்கூட்டிய அனுமதி பெற்றிராத எந்த வியாபாரமும் திருவிழாக் காலத்தில் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர அலுவலகம், மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்.
21-07-1994. (ஏ-4231)

மணிவாக்கு

நல்ல சிந்தனை; உயர்ந்த எண்ணங்கள், அன்பு, பொறுமை, நேர்மை, பணிவு, ஈகை இவைகள் உன் வாழ்க்கையை உயர்த்தும்.

— சாகர்

நமது நோக்கு

ஓடக்காரன் நிலையா?

ஓநாய், ஆடு, புல்லுக் கட்டு - இவற்றை ஓடக்காரன் ஆற்றின் அடுத்த கரைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஒரே தடவையில் மூன்றையும் ஏற்றிச் செல்ல ஓடத்தில் இடமில்லை. தனித்தனி விட்டாலோ - ஓநாய் ஆட்டைக் கடிக்கும்; ஆடு புல்லைத் தின்னும்!

ஓடக்காரன் எப்படி எடுத்துச் செல்வான்?

இது பழைய புதிர் - விடுகதைத் துணுக்கு. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பயிற்சி பெற, இத்தகைய புதிர்களை மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பது கல்வி நிபுணர்களின் கருத்து!

அரசியலிலே - இத்தகைய புதிர்களை அவிழ்க்க முடியாமல், எல்லாவற்றையும் ஓடத்தில் ஏற்றி ஓடத்தை மூழ்க விடுவதையும் ஆடு புல்லைத் தின்னவிட்டு ஏமாந்து போவதையும் காணும் நிலை எமக்கு ஏற்படுகிறதல்லவா?

இன்று - தேர்தல் என்ற ஆற்றைக் கடக்க ஜனாதிபதி படும்பாடு - ஓடக்காரனாக அவர் செலுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் ஏராளம்; ஏராளம்!

காமினி திசநாயகா ஆமென்றால் சிறிசேனா கூரே புலம்புகிறார். இப்படி ரணில் - ஹேமா, தொண்டமான் - செல்லச்சாமி போன்ற பல கோஷ்டிக் குழுக்களையும் ஒரே ஓடத்தில் ஏற்றி இறக்குவதிற் பல சிக்கல்களைச் சந்தித்தார்; இன்னும் சந்திக்க வேண்டியுள்ளது.

செல்லச்சாமி வேறு ஓடத்தில் ஏற, தொண்டா தோணியிற் கைவிடப்பட்ட காரணத்தால், ஏற்கனவே ஓடமில்லாமல் பிரேமதாசவுடன் இருந்தவர் தவிக்கும் நிலை ஏற்பட்டது.

எந்த ஓடம் பாதுகாப்பானது, விரைவாக ஆற்றைக் கடக்கும் என எண்ணிப் பார்த்து, முஸ்லீம் காங்கிரஸ் பொதுசன முன்னணியோடு இணைந்துள்ளது.

கொள்கை வேறுபாடுகள் கொண்ட முஸ்லீம் காங்கிரஸ், தமிழ்க் குழுக்கள், எம். ஈ. பி ஆகியவற்றை ஒரே இடத்தில் ஏற்ற முடியாதிருந்த சந்திரிகா எம். ஈ. பி.க்கு இடமில்லை என்பதைத் தெளிவாக்கிவிட்டார்.

ஓடத்தில் இடம் கிடைக்காதவர்கள் என்ற மனநிலையில் "முஸ்லீம் காங்கிரசோடு என்ன ஒப்பந்தம், அதனைப் பகிரங்கப்படுத்தவும்!" என்ற தினேஷ் குணவர்த்தன கேட்பதில் என்ன நியாயமிருக்கிறது?

விமான விபத்து: 21 பேர் பலி

(பனாமா)

கிழக்கு பனாமாவின் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் விமானமொன்று வீழ்ந்து நொருங்கியதில் அதில் இருந்த 21 பயணிகளும் உயிரிழந்தனர்.

பனாமாவுக்குச் செல்லவேண்டிய இந்த விமானம் கோலோன் நகரத்திலிருந்து புறப்பட்டவுடனேயே வெடித்து வீழ்ந்ததாக கம்பனியின் தலைவர் தெரிவித்துள்ளார். —லே

பலதும் பத்தும்

அவர் எங்கே?

1988— தேர்தலின்போது —ஜே. வி. பி.யின் அச்சுறுத்தலால்— நேரடி வோட்டுப் பிரசாரம் செய்வதோ, சுவரொட்டிகளை ஒட்டுவதோ, இலேசான காரியமா?

எனினும் — ஐ.தே.க. காரர்களுக்கு — ஒரு இரவிலேயே—நாடெங்கும் ஒட்டப்பட்டுவிடும்! எப்படி முடிந்தது?

இதற்கென — 'சிறிகோத்தா'வின் (ஐ.தே.க அலுவலகம்) 22 குழுக்கள் — ஒவ்வொன்றிற்கும் 5 வாகனங்கள் - இவர்களுக்குப் பாதுகாப்பு? வேறு யார்? சொத்தி உதவி குழுவினர்தான்!

இவற்றிற்கெல்லாம் பொறுப்பாக இருந்த ஐ.தே.க. உதவிச் செயலாளர் அநுரா இரத்தினநாயக்காவை, பிரேமாவின் ஆள் என்பதால் ஒதுக்கிவிட்டார்கள்.

இப்போது— அவர் பொதுசன முன்னணியினராம்!

—மயூரன்

இராசி பலன்

22-07-1994

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஆடி 06)

பூரணை பி.இ. 2-34 வரை, பூராடம் மு.ப. 10-30 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 10-31 முதல் 12-01 வரை சுபநேரம் காலை 6-01 முதல் 7-31 வரை.]

மேடம்: வரவு சாதகமாகும். சுபகாரியம், அமைதியான சூழ்நிலை.

இடபம்: சில தொல்லைகள், மௌன நிலை, தொழில் சுமைகள்.

மிதுனம்: கலைத்துறை ஈடுபாடு, பணவரவு, மகிழ்ச்சியான சம்பவம்.

கடகம்: காரிய சித்தி, நட்பு உறவு, தெய்வீகச் செலவு.

சிம்மம்: மனைவியால் துயர், வீட்டில் இலேசான வருத்தம், பயனற்ற பேச்சு.

கன்னி: நிம்மதிக் குறைவு, வைத்தியச்செலவு, [illegible].

துலாம்: தொழில் லாபம், பயணத்தால் நன்மை, தானதர்மம்.

விருச்சிகம்: பொறுமைக் குறைவு, அலைச்சல் துன்பம், மனச்சலனம்.

தனுசு: கௌரவக் குறைவு, பணியாளர் குறை, மறதிப் போக்கு.

மகரம்: வேதனையான செலவு, பெண்பகை, தொழில் நஷ்டம்.

கும்பம்: செயலில் சாதனை, குடும்ப சுகம், பயனுள்ள முயற்சி.

மீனம்: கடன் வரவு, மாதா வழி உறவு, கற்பனை வாதம்.

ஜோஸ்யர்.

"ராணுவம் நடத்தவிருக்கும் தாக்குதலை முறியடிப்போம்"

சமகால கருத்தரங்கில் பாப்பா உரை

(யாழ்ப்பாணம்)

கடந்த எட்டு மாதகால இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாதிருக்கின்ற அரச படைகள் விரைவில் எமது மண்ணில் பெரும் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டு வருகிறது. இதனை நாம் முறியடித்து எமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்கவேண்டும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. பாப்பா தெரிவித்தார்.

திரு. அப்துல்லா தலைமையில் கைதடி மேற்கில் இடம்பெற்ற சமகால கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது: இன்றைக்கு மாவீரர்களாகக் கிட்டத்தட்ட 6,500 போராளிகளாக இருந்தாலென்ன, களத்தில் நின்று போராடிக்கொண்டிருக்கிறவர்களாக இருந்தாலென்ன எல்லோரும் மக்கள் மத்தியில் இருந்து தான் உருவானவர்கள். இயக்கத்திற்கு வரும்பொழுது சாதாரணமாக இருந்தவர்கள் இயக்கத்தில் இடைவிடாத பயிற்சியினூடாகத்தின் மூலம் இன்று பெரும் சாதனைகளையெல்லாம் நிகழ்த்தியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் தான். தலைவர் அவர்கள் எத்தனையோ போராளிகளை ஆற்றலுள்ளவர்களாக, திறமைசாலிகளாக உருவாக்கியிருக்கிறார். தலைவரின் வீரத்தினால், ஆற்றலினால், அறிவினால் தான் இன்று பெரும் சாதனைகளை மண்ணில் நாம் நிகழ்த்தி இருக்கிறோம்.

தீவகங்களில் தேர்தல் நடக்கிறது. இதன் மூலம் எமது மண்ணில் அமைதி ஏற்படப்போவதில்லை.

பெரும் தாக்குதலை நடத்துவதற்கு அவர்கள் திட்டம் போடுகிறது. இதனை நாம் முறியடிக்கவேண்டும். எம்மிடம் போதிய ஆயுதம் இருக்கிறது ஆனால் ஆட்பலம் போதாது! எனவே தான் கேட்கிறோம் வாருங்கள் இயக்கத்தில் சேருங்கள். எதிரியோடு போரிடுங்கள். நீங்கள் போராடாமல் மரணிப்பதை விட போராடி மரணிப்பது எவ்வளவு மேலானது என்பதை நன்கு உணர வேண்டும்.

இன்று அரசு இளைஞர்கள் மத்தியில் நேரடியாகச் சென்று ஆட்களை திரட்டி வருகிறது. ஏன் நாம் இந்த மண்ணைக் காப்பதற்கு எமது மக்களிடம் போராட வாருங்கள் என்று கேட்க முடியாது. அனைவரும் தான் போராட்டத்தில் பங்கு பற்றுங்கள் என்று கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. இது எங்களுடைய சொந்த மண். இந்த மண்ணில் இன்று நாம் சுதந்திரமாக நடமாடித் திரிகிறோம். இந்த சுதந்திரம் நீடிக்கவேண்டுமானால் எமது பிரதேசத்திலுள்ள எதிரிகளை நாம் அடித்துக் கலைக்கவேண்டும். அத்துடன் பல [illegible] எதிரிகளையும் விரட்டியடிக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

கலைபண்பாட்டுக் கழகப் பதில் பொறுப்பாளர் திரு. சேரலாதன், மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி பிரசாந்தி ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள். நிகழ்வில் உயிராயுதம் படக்காட்சி காண்பிக்கப்பட்டதுடன் 'புயலாய் எழுவோம்' என்ற தெருவெளி நாடகமும் இடம்பெற்றது.

-கி

தளபதிகளின் சிபார்சின்றி ஆயுதங்கள் கொள்வனவு

பல கோடி ரூபா கமிஷன் பெறப்பட்டது

(கொழும்பு)

இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப் படைத் தளபதி ஆகியோரின் சிபார்சு எதுவுமின்றி, பாதுகாப்புப் படை அதிகாரிகளினால் பல கோடி ரூபாவுக்கு ஆயுதக் கொள்வனவுகள் இடம்பெற்றுள்ளது என்று 'ராவய' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இராணுவத்தின் உபயோகத்துக்கென பி. எம். பி 1-60 போக்குவரத்து வாகனங்களும் பி.எம்.பி. 2 ரக வாகனங்களும், இராணுவ நடவடிக்கைகளுக்குப் பாவிப்பதற்கென 10 வாகனங்களும் மொத்தமாக 102 கோடி ரூபாவுக்குக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடற்படையினருக்கு ரோந்துக்காக 52 மீற்றர் நீளமான 10 படகுகளும், விசைப்படகு இரண்டும் 90 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

விமானப் படைக்கு ஏ.என் ரக போக்குவரத்து விமானம் 3, ஹெலிகொப்டர் 8, 35 ரக ஹெலிகொப்டர் 3 என்பன 167 கோடி ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

360 கோடி ரூபாவுக்கு மேல் கொள்முதல் செய்யப்பட்ட ஆயுதக் கொள்வனவில் அதிகாரிகள் பலர் 'கொமிஷன்' பெற்றிருக்கலாம் என்றும் 'ராவய' மேலும் தெரிவித்துள்ளது.

1994ம் ஆண்டு ஜனவரிக்குப் பின்பு இடம்பெற்ற இந்த ஆயுதக் கொள்வனவானது வடக்கு-கிழக்கில் எந்த விதமான இராணுவ நடவடிக்கையும் நடக்காத நேரத்திலும் ஆயுதப் படையினரின் சிபார்சு இன்றியும் இடம் பெற்றுள்ளது.

இம்முறைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோற்கும்போதும் இந்த நேரத்தில் இம்மாதிரியான பல ஊழல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்றும் 'ராவய' தெரிவித்துள்ளது. (ம-கி)

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-07-22 வெள்ளி இரவு

8-01 — கலை மஞ்சரி - முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது "உலக உலா" சஞ்சிகையின் ஜூலை, ஜூன் மாத வெளியீடு; அடுத்து சிறுகதை—"ஓ...மனிதர்களே" சிறுகதையை அடுத்து கவிதைகள்!
1. ஒவியனை நோக்கி
2. சமுதாய ஏணியிலோர் சாதனை மதிப்போம்.

8-30 — செய்திகள்

8-40 — அரசியல் அரங்கம் "இன்னமும் கலையாத ஏகாதிபத்தியக் கனவுகள்"

8-50 — சத்திய கானங்கள்

1994-07-23 சனி காலை

7-02 — மாவீரர் வணக்கம்

7-15 — நீங்கள் கேட்டவை

7-30 — செய்திகள்

7-35 — பத்திரிகைச் செய்திகள்

7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

கம்பன் விழாவின் 4ம் நாள் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் நடைபெறும் 5 நாள் கம்பன் விழாவின் 4ம் நாளான நாளை சனிக்கிழமை நிகழ்ச்சிகள் வருமாறு;

காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சியில் தலைமையுரையை திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலமும் தொடக்கவுரையை வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி செல்வி ரூபி வைத்தியராஜாவும், வாழ்த்துரையையும் இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதனும் நிகழ்த்துவர்.

இதையடுத்து திரு ஜெயராஜ் தலைமையில் 'இராமனின் பெருந்தன்மை பெரிதும் வெளிப்படும் காட்சி எது?' எனும் தலைப்பிலான சுழலும் சொற்போர் இடம்பெறும்.

4-30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சியில் தலைமையுரையை பரமஸ்ரீ ந. வீரமணி ஐயரும் தொடக்கவுரையை வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியனும், வாழ்த்துரையை கலாநிதி க. குணராசாவும் நிகழ்த்துவர்.

இதையடுத்து திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் 'கம்பசாகரம்' எனும் பொருள் பற்றி சிந்தனைக் கருத்தரங்கு நடைபெறும். அடுத்ததாக 'கம்பன் அரங்கில் வழங்கும் உரிமையினை எங்களுக்குத் தாரும் இனி' எனும் தலைப்பில் 'தேர்வு நேர்காணல் கவியரங்கு' மூன்று கவிஞர்கள் தலைமையில் நடைபெறும்; இவ் அரங்கில் எட்டு கவிஞர்கள் பங்குபற்றுவர். (கி)

"உயர்ந்த மரங்களை வளர்த்திடுவோம்
உயிரினம் மேலாக மதித்திடுவோம்"

12 லட்சம் ரூபா பெறுமதியான

போதைப் பொருள் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

12 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்கு கடத்தி வர முற்பட்ட பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டார்.

மேற்படி சந்தேகநபர் ஹெரோயின் போதைப் பொருளை சூட்கேசில் மறைவு செய்திருந்தார் எனவும் பாகிஸ்தானிலிருந்து இவர் நேரடியாக இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார் எனவும் விசாரணைகள் மூலம் அறிய வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ச-இ

தேர்தல் மோசடி ஏற்படுத்த அரசதரப்பினர் முயற்சி

ஜனாதிபதிக்கு எதிரணி கடிதம்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் மோசடிகளும், குழப்பங்களும் ஏற்பட வழி இருப்பதாகவும் இது குறித்து தமக்கு பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலர் டி.எம். ஜயரத்ன ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு ஊறுவிளைவிக்கத்தக்கதான சாத்தியக் கூறுகள் தென்படுவதாகவும் அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸாரைத் தடுத்து நிறுத்துமாறும் அந்தக் கடிதத்தில் முக்கியமாக கோரப்பட்டுள்ளது.

அமைச்சர்களும் அரசதரப்பினரைச் சேர்ந்தவர்களும் இந்த மோசடிகளுக்குப் பின்னணியாக இருந்து செயல்படுவதாகவும் ஜனாதிபதியின் கவனத்துக்கு திரு. ஜயரத்ன கொண்டு வந்துள்ளார். -இ

க. பொ. த. (உ/த) பரீட்சை

அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடைபெற இருக்கும் க. பொ. த (உ/த) பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கடந்த 20ம் திகதி யாழ். கல்வித் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றது. பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களிடம் கையளிக்கப்படும் என தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்படும் என்று கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (157-இ)

வினாத்தாள்கள் அடுத்தவாரம்

(திருநெல்வேலி)

க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் [illegible] அடுத்தவாரம் இம்முறை கப்பல் மூலம் எடுத்து வரப்படவுள்ளது.

பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கான கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன. 157

ஷூமேக்கர்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

இத்துண்டு நேற்றுமுன்தினம் வியாழ மண்டலத்துள் பிரவேசித்ததாகவும் மோதலின்போது ஏற்பட்ட புகைமண்டலம் பல நூறு கிலோ மீற்றர் தூரத்திற்கு வியாபித்திருந்ததாகவும் வானியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ச-இ

பொ. ச. மு. 120

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியைச் சேர்ந்த 110 க்கும் 120 க்கும் இடைப்பட்ட வேட்பாளர்கள் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாவார்கள் என அந்தக் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரகாலம் இந்தக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. அரசசார்பமைப்பைச் சேர்ந்த 38 அதிகாரிகள் இந்த மதிப்பீட்டை மேற்கொண்டனர்.

அநுராதபுரம், பதுளை, கொழும்பு, திகாமடுல்ல, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா, பொலநறுவை, இரத்தினபுரி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

அதிவேகமான அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு, வேலையில்லாப் பிரச்சினை, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டமை, இளைஞர்கள் காணாமல் போனது, லஞ்ச ஊழல் போன்றவை பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றிபெறுவதற்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன.

17 வருடகால ஆட்சியில் மக்கள் ஒரு ஆட்சி மாற்றத்தை விரும்புவதும் தேர்தலில் போட்டியிடும் சிறிய அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டிருப்பதும் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியை உறுதிப்படுத்துவதாக உள்ளதாகவும் அந்தக் கணிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இ

வீரவணக்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

லெப். செல்லக்கிளி அம்மானின் 11ம் ஆண்டு நினைவு வீரவணக்கக் கூட்டம் திருநெல்வேலி காளி அம்மன் ச. ச. நிலைய முன்றலில் நாளை 23ம் திகதி இரவு 7-30 மணிக்கு [illegible] அமைப்புப் பொறுப்பாளர் செல்வி [illegible] தலைமையில் நடைபெறும்.

கடற்படையினர்

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

கைக்கொண்டுள்ளனராம்,

மேற்படி ஆறு பேரும் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ள ஊர்காவற்றுறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ் அறுவரும் ஊர்காவற்றுறை கடற்பிரதேசத்தில் நுழைந்தபோது இவர்களை [illegible] புரிந்து கொண்ட இலங்கை கடற்படையினர் இவர்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது ஒருவர் காயமடைந்ததாகவும் அவரும் தற்போது குணமடைந்து வருவதாகவும் இலங்கை கடற்படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இ-ச

வாக்குச்சீட்டுகள்

1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்கள் வாக்குச் சீட்டுகள் அச்சிட்டு முடியும் வரை எக்காரணம் கொண்டும் வெளியே செல்ல முடியாது.

நாளொன்றுக்கு 30 ஆயிரம் வாக்குச் சீட்டுகள் அச்சிடும் அதிவேக "ஓப்செற்" அச்சு இயந்திரங்கள் இவ்வேலைகளுக்குப் பாவிக்கப்படுகின்றது.

வாக்குச்சீட்டுகள் அச்சிடுவதற்கு பின்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விசேட கடுதாசிகள் பாவிக்கப்படுகின்றன.

இதுவரை ஒன்பது மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகள் அச்சிட்டு முடிந்து விட்டது. வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பகுதியை சுற்றி இரவு பகலாக ஆயுதம் தாங்கிய பொலிஸார் விசேட அதிகாரி ஒருவரின் தலைமையின் கீழ் காவலில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவித்தார். வீ-இ

மக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாய் வீதியூடாக பெருமளவு ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் மூட்டை முடிச்சுகளுடன் சென்றுகொண்டிருந்தனர் என தெரிவிக்கப்பட்டது. 72 ச

டி. பியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டி. பி. விஜேதுங்க உரையாற்றி வருவதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

பொலிசார் குடும்பத்தவர்க்கு

பிரதமர் சலுகைகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின்கீழ் பொலிசாரின் குடும்பங்களுக்கு விசேட கூட்டமொன்று நேற்று நடத்தப்பட்டது.

இதன் பிறகு அவர்களுக்கு தேனீர் விருந்தொன்றும் வழங்கப்பட்டது.

தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் [illegible] இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பொலிஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா, பிரதிப் பொலிஸ் மா அதிபர் [illegible] ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பொலிஸாரின் குடும்பத்தவர்களுக்கு சலுகைகளும், மற்றும் வீடமைப்புக் கடன்களும் பெற்றுக்கொடுப்பதாக இந்தக் கூட்டத்தில் பிரதமர் வாக்குறுதி அளித்தாராம்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொலிசாரினதும் அவர்கள் குடும்பத்தவர்களினதும் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் விதமாகவே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டதாக பொலிஸ் பிரிவின் ஒரு பகுதியினர் சுட்டிக்காட்டியுள்ளனர். இ

★ தேர்தல் பிரசார உரை

திருமலையில் சிங்கள குடியேற்றம் வேகமாக நடைபெறுகிறது

சுயேட்சை குழு - ராஜகாரியர்

(கொழும்பு)

வடக்கில் ஆயுதப்போராட்டம் நடக்கிறது. கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகள் சிவப்பு நிறமாக மாறிவருகிறது.

திருமலையில் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தற்போது மிக வேகமாக நடத்தப்பட்டு வருகிறது. இவை அனைத்தையும் தடுத்து நிறுத்த நாம் தற்போது தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளோம். இவ்வாறு திருமலை மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக் குழுவின் தலைவர் திரு. ராஜகாரியர் நேற்று [illegible] தேர்தல் பிரசார உரை நிகழ்த்தியபோது கூறினார்.

அவர் தமதுரையில் தொடர்ந்து கூறியதாவது: அரசின் திட்டமிட்ட குடியேற்றத்தினால் இன்று தமிழர் திருமலையில் சிறுபான்மையினராகி விட்டனர். 70 வீதத்துக்கு மேலாக இருந்த தமிழர் இன்று திருமலையில் 30 வீதநிலைக்கு வந்து விட்டனர்.

இந்த வீதத்திலும் உள்ள எமது மக்கள் தற்போது பெரும்பாலும் அகதிகளாகி தம்பலகாமம், கிண்ணியா, நிலாவெளி, குச்சவெளி, பச்சைனூர் ஆகிய அகதி முகாம்களில் அகதிகளாக இருக்கின்றார்கள். இவர்களின் வாக்குகள் தற்போதைய தேர்தல் இடாப்பில் தெளிவற்ற முறையில் இடம்பெற்றிருக்கிறது.

திருமலையில் அரசினால் ஆரம்பித்த இணைந்த பல்கலை கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரிகள் போன்றவை அனைத்துமே இங்கு நிறுவப்பட்டுள்ளன. இவற்றுக்கான நிரந்தர கட்டடமோ அல்லது நிரந்தர விரிவுரை வகுப்புகளோ நடைபெறுவதில்லை.

இவை அனைத்தும் அரசாங்கத்தினால் திட்டமிட்டு தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் சதித்திட்டங்களாகும். இந்த நிலையில் தமிழ் மக்களாகிய நாம் ஒன்றுபடாவிட்டால் நிச்சயம் இத்தேர்தலில் திருமலை மாவட்டத்தின் சார்பில் சிங்களப் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் செல்வதை யாராலும் தடுக்க முடியாது.

தமிழீழத்தையோ அல்லது மாகாணசபை அமைப்பையோ அல்லது சமஷ்டி முறையையோ எதுவானாலும் நாம் அதனை ஏற்கத் தயாராக இருக்கின்றோம். ஆனால் அதற்கு முன்பு திருமலையில் அரசின் திட்டமிட்ட இந்த [illegible] தடுக்கவேண்டியதனாலேயே நாம் இந்த தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளோம்" என்று கூறினார். வீ-இ

மேடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மறைந்தனர்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அந்த மேடையில் இருந்தாலும் அவருக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை என அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டபோது தானியவை என்ற இடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி கலந்து கொண்டதாகவும் சேதமடைந்த உடைகளுடன் அப்போது அவர் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

10க்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜே. ரிஷி, வயது 11, பண்டத்தரிப்பு. ஜே. தனுஜ, வயது 9, பண்டத்தரிப்பு. ரவிச்சந்திரன், வயது 26, பண்டத்தரிப்பு. பி. கண்மணி, வயது 65, பண்டத்தரிப்பு. பி. நாகம்மா, வயது 40, பண்டத்தரிப்பு. கே. பவளராணி, வயது 37, சில்லாலை. கே. கிருஷா, வயது 18, சில்லாலை. கே. ராஜேஸ்வரி, வயது 36, சில்லாலை. நாகரத்தினம், வயது 38, சில்லாலை. —157-இ

பண்டத்தரிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னேறி வந்த படையினரை நோக்கி இருமருங்கிலும் விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

இம்மோதலில் விடுதலைப்புலிகளின் போராளியான வீரவேங்கை [illegible] (அராலி தெற்கு-[illegible]) என்பவர் வீரச்சாவடைந்தார். 72. ச-இ

அரசியலமைப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

தற்போதுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை ரத்துச் செய்யப்படும். நாடாளுமன்றத்துக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு நாடாளுமன்ற ஆட்சிமுறை மீண்டும் அறிமுகப்படுத்தப்படும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெற்று பதவிக்கு வந்தால் நவம்பர் மாதம் திட்டமிடப்பட்டிருக்கும் ஜனாதிபதி தேர்தல் நடத்தும் அவசியம் ஏற்படாது.

சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை வழங்குவதற்காக ஜனநாயக அமைப்பின்கீழ் சுதந்திர நிர்வாக முறை ஒன்றை அமைப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்த முன்னணி தயாராகவுள்ளது என்றார். —இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தார் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number Q/10936/N